# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 3.00 மணித்தியாலம் | கர்நாடக சங்கீதம் - I,II | பாட எண் : 42 T I, II |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

## பகுதி – I

LMDMUnit

01. லலித கலைகளில் மேன்மையானது,
1. சிற்பம் 2. ஓவியம் 3. நடனம் 4. சங்கீதம்

02. எடுப்பு என்பதன் மறுபெயர்,
1. க்ரஹம் 2. லயம் 3. ஆவர்த்தனம் 4. ஸ்தாயி

03. இராக கதம்பம் என அழைக்கப்படுவது,
1. கீர்த்தனை 2. இராகமாலிகை 3. பதம் 4. வர்ணம்

04. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் இடம்பெறும் முக்கிய வாத்தியங்கள்,
1. கடம், ஓர்கன் 2. தவில், புல்லாங்குழல்
3. ஹார்மோனியம், விற்கடம் 4. உடுக்கை, வயலின்


05. “தகிட தகதிமி ” என்ற ஜதிச்சொல் குறிப்பது.
1. திஸ்ரசாபு 2. கண்டசாபு 3. சங்கீர்ணசாபு 4. மிஸ்ரசாபு

06. தியாகராஜ சுவாமிகளின் முத்திரை,
1. குருகுஹ 2. தியாகராஜனுத 3. சியாமகிருஷ்ண 4. புரந்தரவிட்டல

07. “ சின்னஞ்சிறு கிளியே” இராகமாலிகையை இயற்றியவர்,
1. சுப்பிரமணிய பாரதியார் 2. தியாகராஜர்
3. புரந்தரதாசர் 4. ஊத்துக்காடு வெங்கடசுப்பையர்

08. பஞ்சபுராணத்தில் நான்காவதாகப் பாடப்படுவது,
1. தேவாரம் 2. திருவாசகம் 3. திருப்பல்லாண்டு 4. புராணம்

09. எல்லா ஸ்வரங்களும் கோமளஸ்வரமாக உள்ள இராகம்,
1. கல்யாணி 2. தோடி 3. பிலஹரி 4. மாயாமாளவகௌளை

10. இசைக்குறியீடுகளில்  இக்குறியீடு குறிப்பது,
1. குரு 2. லகு 3. காகபாதம் 4. கமகம்

11. ஐந்து அங்கங்களைக் கொண்டமைந்த உருப்படி,
1. வர்ணம் 2. கீதம் 3. பதம் 4. கீர்த்தனை

12. செந்துருத்திப் பண் குறிக்கும் இராகம்,
1. கல்யாணி 2. ஆரபி 3. மத்தியமாவதி 4. பிலஹரி

13. பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களில் பத்தாவதாக இடம்பெறுவது,
1. சுத்தரிஷபம் 2. சதுஸ்ருதிதைவதம் 3. சாதாரணகாந்தாரம் 4. சுத்தமத்திமம்

14. 72 மேளகர்த்தாவில் முறையே 3, 9 ஆவது சக்கரங்கள்,
1. இந்து, பாண 2. ருது, ரிஷி 3. நேத்ர, வேத 4. அக்னி, பிரஹ்ம

15. ஸா; ; ரிகா; ; ; , இந்த சஞ்சாரம் எடுத்துக் கொள்ளும் அட்சர எண்ணிக்கை,
1. 16 2. 15 3. 14 4. 18

16. தாய் இராகங்களில் வரும் ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும் இராகம்,
1. வர்ஜம் 2. வக்ரம் 3. உபாங்கம் 4. பாஷாங்கம்

17. ஆடவர்ணம் அல்லது சௌக்க வர்ணம் எனப்படுவது,
1. அடதாளவர்ணம் 2. பதவர்ணம் 3. தானவர்ணம் 4. நவராகமாலிகா வர்ணம்

18. பின்வருவனவற்றில் சபாகான உருப்படிகளாக அமைவன,
1. கிருதி, பதம் 2. கீதம், பதம் 3. கீர்த்தனை, கீதம் 4. கீதம், வர்ணம்

19. வில்போட்டு வாசிக்கப்படும் வாத்தியம்,
1. தவில் 2. புல்லாங்குழல் 3. வயலின் 4. வீணை

20. திரியாங்கங்களையும் கொண்டமைந்த தாளம்,
1. அடதாளம் 2. துருவதாளம் 3. ஏகதாளம் 4. ஜம்பைதாளம்

21. " ஆனந்த அமிர்தவர்சினி " என்ற கிருதியை இயற்றியவர்,
1. தியாகராஜ சுவாமிகள் 3. முத்துத்தாண்டவர்
2. முத்துஸ்வாமி தீஷிதர் 4. கோபாலகிஷ்ணபாரதியார்

22. ஹிந்துஸ்தானி இசையில் "ஜமன்தாட் " எனப்படுவது,
1. கல்யாணி 2. ஆரபி 3. பிலஹரி 4. பந்துவராளி

23. இந்திய சங்கீதத்தில் பல தாளங்களை அழியாது பாதுகாத்தவர்,
1. புரந்தரதாசர் 2. முத்துத்தாண்டவர் 3. அருணகிரிநாதர் 4. திருஞானசம்பந்தர்

24. சங்கீர்ணஜாதி அடதாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கையை மேள எண்ணாக கொண்ட இராகம்,
1. கல்யாணி 2. கரகரப்பிரியா 3. சங்கராபரணம் 4. தோடி

25. இலட்சண கீதத்தில் ஸ்நிபநி /ஸ்ா / ஸ்ா என்ற ஸ்வரப்பகுதியின் சாகித்யம்,
1. களை தருவனவே 2. மரிஸவில் அடங்கும்
3. அதில் வரும் ஸ்வரங்கள் 4. ஔடவமேயாம்

26. 24 மெட்டுக்களை உடைய வாத்தியம்,
1. வீணை 2. வயலின் 3. நாதஸ்வரம் 4. தவில்

27. " ஸ்ரீராஜராஜேஸ்வரி" என்ற கீர்த்தனையை இயற்றியவர்,
1. ஸ்ரீதர் பிச்சையப்பா 3. தியாகராஜசுவாமி
2. நீலா இராமமூர்த்தி 4. பொன்ஸ்ரீவாமதேவன்

28. திருத்தாண்டகம் பாட உகந்த இராகம்,
1. கரகரப்பிரியா 2. ஹரிகாம்போதி 3. கல்யாணி 4. சங்கராபரணம்

29. கடபஜாதி சங்யைக்காக காமவர்த்தனி என அழைக்கப்படுவது
1. கனகாங்கி 2. கல்யாணி 3. தோடி 4. பந்துவராளி

30. " அக்னி- கோ " என்ற சங்கேதம் குறிக்கும் இராகம்
1. மாயாமாளவகௌளை 2. சங்கராபரணம் 3. ரத்னாங்கி 4. கரகரப்பிரியா

31. " ஸ்வாமி உன்னை " என்ற அடிகளை உடைய உருப்படி,
1. பதம் 2. வர்ணம் 3. இராகமாலிகை 4. கீதம்

32. மிருதங்கத்திற்கு கணீர் என்ற நாதத்தைக் கொடுப்பது
1. அரடா 2. புள் 3. கரணை 4. வலந்தலை

33. " குற்றாலக் குறவஞ்சி" என்ற இசை நாடகத்தை இயற்றியவர்
1. பைடாலகுருமூர்த்தி 2. புரந்தரதாசர்
3. கோபாலகிருஷ்ண பாரதியார் 4. திரிகூட இராசப்பகவிராயர்

34. மாணவர்கள் ஸ்வரக்கோர்வைகளை ஆக்கம் செய்து பாடுவதன் மூலம் வெளிப்படுத்துவது
1. ஸ்வரஞானம் 2. லயஞானம் 3. சுருதி ஞானம் 4. சாகித்திய ஞானம்

35. தெலுங்கு மொழியில் பஞ்சரத்தின கிருதிகளை இயற்றியவர்
1. கோபாலகிருஷ்ண பாரதியார் 3. தியாகராஜ சுவாமி
2. முத்துஸ்வாமி தீஷிதர் 4. முத்துத் தாண்டவர்

36. பண்ணியம் என்பதற்கு கர்நாடக இசையில் வழங்கப்படும் பெயர்
1. திறத்திறம் 2. ஷாடவம் 3. ஔடவம் 4. திறம்

➢ **பின்வரும் கூற்றுக்களைக் கருதுக;**

A. செந்துருத்திப்பண்.
B. மனித பார்வைக்கு முதல் வந்த பிரதிமத்திம இராகம்.
C. புராணம் பாட உகந்தது.
D. தீவிர ஸ்வரங்களை எடுத்துக்கொள்வது.

37. மத்தியமாவதி இராகத்துடன் தொடர்புபட்டது,
1. AD 2. BD 3. AB 4. AC

38. BD என்பவற்றால் இனங்காணப்படும் இராகத்தின் மேள எண்
1. 65 2. 22 3. 08 4. 15

39. பஜனைப் பத்ததியின் தந்தை எனப் போற்றப்படுபவர்,
1. கோபாலகிருஷ்ண பாரதியார் 2. முத்துத்தாண்டவர்
3. தாளப்பாக்கம் சின்னையா 4. தாளப்பாக்கம் அன்னம்மாச்சாரியார்

40. "சின்னஞ்சிறு கிளியே " என்ற இராகமாலிகையின் இராகங்கள் முறையே,
1. மாண்டு, வசந்தா, காபி, திலங், நீலமணி 2. காபி, மாண்டு, வசந்தா, திலங், நீலமணி
3. காபி, வசந்தா, மாண்டு, திலங், நீலமணி 4. மாண்டு, காபி, வசந்தா, நீலமணி, திலங்

( 40 X 1 = 40 புள்ளிகள்)

LMDMUnit

## பகுதி – II

- பகுதி II இன் வினா இலக்கம் ஒன்று கட்டாயமானது.
- ஏனையவற்றில் இருந்து விரும்பிய நான்கு வினாக்களைத் தெரிவு செய்க.
- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01. 1. அப்பியாச கானத்திற்கும் சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி எது?
2. விலோம சாபு தாளத்தில் உருப்படிகளை இயற்றிய வாக்கேயகாரர் யார்?
3. ஸரிகமபதநிஸ் என்னும் பகுதியில் உத்தராங்கப் பகுதியாக அமைவது?
4. கும்மிப் பாடல்களுக்கு புத்துயிரளித்த வாக்கேயகாரர் யார்?
5. வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்களை எவ்வாறு அழைப்பர் ?
6. நாயக, நாயகி பாவத்தை கொண்டமைந்த உருப்படி யாது?
7. நறுக்கு, சீவாளி ஆகிய பாகங்களைக் கொண்ட வாத்தியக்கருவி யாது?
8. சாதாரி பண்ணுக்குரிய இராகம் யாது ?
9. பல்லவர் காலத்து இசைமரபு பற்றி குறிப்பிடும் கல்வெட்டுக்கள் 2 குறிப்பிடுக.
10. தத வாத்தியத்திற்கு இரண்டு உதாரணம் தருக.

(12 புள்ளிகள்)

02. பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஒரு இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக.
**(மேள எண், ஆரோகண அவரோகணம், ஸ்வரஸ்தானம், விசேட அம்சங்கள், சஞ்சாரம், உருப்படி என்பன குறிப்பிடப்பட வேண்டும்.)**
1. பந்துவராளி 2. ஆரபி 3. கல்யாணி

(12 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றி விரிவான விளக்கம் தருக
1. இராகமாலிகை 2. சாபுதாளம் 3. வர்ணம்

(6 X 2 = 12 புள்ளிகள்)

04. 1. நான்முகன் என அழைக்கப்படும் வாத்தியக் கருவி யாது?
2. இவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களை குறிப்பிடுக.
3. இதன் அமைப்பினை விளக்குக.
4. இதனை வாசிக்கும் முறையினை விளக்குக.
5. இவ் வாத்தியத்தை வாசித்து பிரபல்யமடைந்த வித்துவான்கள் இருவரைக் குறிப்பிடுக.

(1 + 3 + 3 + 3 + 2 = 12 புள்ளிகள்)

(5) கோபாலகிருஷ்ண பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றையும் இசைப்பணியையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.
1. பிறந்த இடம் 2. வாழ்க்கை காலம்
3. இளமைக்காலமும் கல்வியும் 4. இசைக்காற்றிய பணிகள்
5. உருப்படிகள் 6. சீடர்கள்

(1 + 2 + 2 + 4 + 2 + 1 = 12 புள்ளிகள்)

(6) பின்வரும் அலங்காரத்தினைப் பூர்த்தி செய்க.

l5 o l5 l5
ஸரீகம **/** கரி **/** ஸாரிகரி **/** ஸாரிகம **//**

(12 புள்ளிகள்)

(7) 1. சப்த தாளங்கள் லகுவின் ஜாதி பேதங்களினால் 35 தாளங்களாக உருவாகும் முறையினை விளக்குக.
(03 புள்ளிகள்)
2. சப்த தாளங்களில் துருவதாளம், ஜம்பை தாளம், திரிபுடை தாளம் என்பன ஜாதி பேதமடையும் முறையினை அட்டவணைப்படுத்துக. (09 புள்ளிகள்)

அல்லது

1. 16 ஆம் 17 ஆம் நூற்றாண்டின் இந்தியாவில் கர்நாடக இசை வரலாற்றின் கலாசாரப் பின்னணியை ஆராய்க.

(12 புள்ளிகள்)

LMDMUnit